**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**O.S.No:157/2025**

**CNR No.TNTM22-000741-2025**

ஞானவேல், வயது 42, த/பெ.கோபால்,
பிள்ளையார் கோயில் தெரு, தொழுப்பேடு கிராமம்,
சேத்பட் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். ... வாதி

//எதிர்//

குமார், வயது 60, த/பெ.ராஜி கவுண்டர்,
நத்தக்கொல்லை தெரு, மொடையூர் கிராமம்,
போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். ...பிரதிவாதி

வழக்குத்தொகை ரூ.2,72,000/–ம் அசல் தொகைக்கு வழக்கு தாக்கலான நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 9% பின்வட்டியும், செலவுத் தொகை கோரியும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் – 13.06.2025
தாவா பதிவு செய்யப்பட்ட நாள் – 17.06.2025

இவ்வழக்கின் தாவா மதிப்பு ரூ.2,72,000/– அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 22 ன் படி ரூ.8,160/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் வழக்கு மூலம் 15.06.2022 தேதியில் களம்பூர் டவுன், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை ஒரு தலைபட்ச உத்தரவுக்கு உட்படுத்தியும் வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

2. வாதிக்கு பிரதிவாதி வழக்கு தொகை ரூ.2,72,000/-ம் அசல் தொகை ரூ.2,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீத வட்டியும் பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் வரை ஆண்டுக்கு 6 சதவீத வட்டியும் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புரை பகரப்படுகிறது.

3. வாதிக்கு பிரதிவாதி வழக்கின் செலவுத் தொகையாக ரூ.10,565/- வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

### செலவுத்தொகை பட்டியல்

**Plaintiff's Cost**

| | | |
|---|---|---|
| 1. Stamp for plaint | Rs. | 8,160.00 |
| 2. Stamp for power | Rs. | 10.00 |
| 3. Pleader's Fee | Rs. | 2,000.00 (As prayed) |
| 4. Service of process | Rs. | 15.00 |
| 5. Preparation of Process | Rs. | 10.00 |
| 6.Stamp on petition | Rs. | 20.00 |
| 7. Pleading Charges | Rs. | 200.00 |
| 8. Pre suit notice | Rs. | 150.00 |
| Total | Rs. | 10,565.00 |

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**Sd/-S.செந்தில் பாபு,**
**சார்பு நீதிபதி,**
**போளூர்.**